மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை
அ.வ.எண். 136/24
பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: குட்டிபாண்டியன் | தேதி : 13.03.26 |
| வயது : | த/பெ : வெள்ளபாண்டி தேவர் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>13.03.26 குறுக்கு விசாரணை</u>

1.பரமானந்தத்திற்கு வழக்குசொத்து எப்படி பாத்தியப்பட்டதாக சொல்கிறேன் என்றால் அரசாங்கம் கொடுத்ததன் மூலம் பாத்தியம். அதற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் பட்டா உள்ளது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 3 செண்ட் ஆகும். வழக்கு சொத்தில் வாதிகள் ஆடு, மாடு கட்டி அனுபவித்து வருகின்றனர் என்றால் ஆடுகள் மட்டும் உள்ளன. ஆனால் யாருடையது என்று தெரியாது. சாட்சி தற்போது ஊரில் உள்ள ஆடுகள் இருப்பதாக கூறுகிறார்.

2.வழக்கு சொத்து கம்பி வேலி போட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் கம்பி வேலி போட்டு அடைத்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பரமானந்தம் அடைத்துள்ளதாக சொன்னார்கள். வாதிகள் தான் கம்பி வேலி போட்டு அடைத்துள்ளனர் என்றால் நான்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.13 19:33:51 +0530

பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி நீண்ட காலம் சென்னையில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சென்னைக்கு போவார், வருவார்.

3.1ம் வாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் தெரியாது. பொதுவாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுத்துவிட்டால் கணவரின் ஊரைதான் அவரது சொந்த ஊர் என்று சொல்வார்கள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு 2004ல் திருமணம் ஆகிவிட்டது என்றால் ஞாபகம் இல்லை. 1ம் வாதி திருமணம் ஆன பிறகு வைத்தியலிங்கபுரத்தில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்து 1ம் வாதியின் மனைவி மல்லிகாவுக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்தார் என்றால் தெரியாது.

4.பிரதிவாதிகள் தான் தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தினை தொடர்ந்து இடையூறு செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.13 19:33:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.